www.tamilarangam.net

# உயிர்நிழல்



# கலைச்செல்வன்

**1960 - 2005**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலை...

வெளிச்சம் வராத பகலுக்கு
ஒளி தந்தது உனது நம்பிக்கை

துயரில் கரைந்த இரவுக்கு
சுடர் ஏற்றியது உனது பெருஞ்சிரிப்பு

ஓரடி முன்சென்றால் ஈரடி பின்தள்ளும்
புகலிடச்சூழலில்

எங்களுக்கு வலுவூட்டியது
உனது வாழ்க்கை

உடல் எரிந்தாலும்
உயிர் நிழலாய் தொடர்கிறது...

*- சேரன்*

www.tamilarangam.net


28-03-1960 - 05-03-2005

# நிழலுக்கு உயிர் கற்பித்த கலைச்செல்வன் எப்போதும் எம்மைவிட்டுப்பிரியாத ஓர் உயிர்நிழல்.

'உயிர்நிழல்' ஆசிரியர் கலைச்செல்வன் 05-03-2005, அதிகாலை இரண்டு மணியளவில் பாரிஸ் நகரில் மாரடைப்பினால் காலமானார்.
யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு வறுத்தலைவிளானைச் சேர்ந்த கனகசிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூன்றாவது குழந்தையாக அவதரித்த இவர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும் ஆவார்.
இலங்கையிலிருந்த காலத்தில் முதலில் 'இளம்மருதம்' என்ற கையெழுத்து சஞ்சிகையினுடாக தனது கன்னி கலை இலக்கிய பணியினை ஆரம்பித்தார். பின்னர் கடந்த 20 வருடகால தனது பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் நகரத்து புகலிட வாழ்வினை கலை, இலக்கியம், திரைப்பட முயற்சிகளுக்காவும் மற்றும் ஜனநாயக மறுப்புகளுக்கெதிரான செயற்பாடுகளுக்காகவும் மாற்றுக்கருத்துக்களை உருவாக்குவதற்காகவும் அர்ப்பணித்தார். ஐரோப்பிய தமிழ் சூழலில் இலக்கியச்சந்திப்பினூடாகவும், பள்ளம், எக்ஸில் போன்ற சஞ்சிகைகள் வாயிலாகவும் பின்னர் உயிர் நிழல் ஆசிரியராகவும் எக்ஸில் நூல் வெளியீட்டாளராகவும் எல்லோராலும் அறியப்பட்டவராக இருந்தார். பெண்ணியம், தலித்தியம், மனித உரிமை போன்ற கருத்தியல்களில் மீது அசையாத பற்றுக்கொண்டு தீவிர விவாதங்களில் ஈடுபட்டு வந்தவர்.
கலைச்செல்வன் 'உயிர்நிழல்' பத்திரிகையினை வெளிக்கொணர்வதற்காக பல வருடங்களாக தனது மாதாந்த வேதனத்தை முக்கிய மூலதனமாக நம்பியிருந்தவர் என்பது இலக்கிய நண்பர்களனைவரும் அறிந்ததே. இனிமையாக நட்புடன் எல்லாத்தரப்பு மக்களுடனும் சளைக்காமல் சமமாக பழகும் தன்மைகொண்ட கலைச்செல்வன் சகலவித அநியாயங்களைக்கண்டு எப்போதுமே கொதித்தெழுபவராயுமிருந்தார். இலங்கை, இந்தியா உட்பட பிற நாடுகளிலிருந்து பாரிசுக்கு வருகைதரும் கலை இலக்கிய நண்பர்களை தவறாமல் சந்தித்து அவர்களை உபசரிக்கும் நல்ல உயர்ந்த பண்பினைக் கொண்டிருந்தார். இவரது சுறுசுறுப்பும் கடின உடல் உழைப்பும் ஏனையவர்களை சிலிர்க்கவைத்தது. பிறர் மீது இலகுவில் இரக்கங்கொண்டு உதவி செய்யும் இவர் சுபாவம், இவர் மீது ஏனையவர்களை இரக்கங்கொள்ள வைத்தது.
கலைச்செல்வனது பிரிவால் துயருற்றிருக்கும் லக்ஷ்மி, கபிலன் மற்றும் அவரது தாய், சகோதரர்கள், சகோதரி, உறவினர்கள், நண்பர்களனைவருக்கும் எமது அனுதாபத்தினைத் தெரிவிக்கிறோம்.

www.tamilarangam.net

# கலைச்செல்வனின் மரணச்செய்தி

துயருறு பொழுதுடன் நாம் - சுவிஸ் நண்பர்கள்.



மனதை உலுக்கும் மரணச் செய்தியாய் நண்பன் கலைச்செல்வன் எழுதப்பட்டுவிட்டான். 45 வயதேயான, வாழ்வின் நடுப் பகுதியைத் தொட்டிருந்தபோது இவன் காவுகொள்ளப்பட்டுவிட்டான். சிரித்த முகம், கலகலப்பான பேச்சு, அரவணைப்பு எல்லாம் அவனது குறும்தாடியை இழக்க மறுத்த முகத்தையும் தாண்டி வந்து அவனது தோற்றத்தை எம் நினைவில் எழுதிச்செல்லும்.

புலம்பெயர் வாழ்வின் ஆரம்பகாலங்களில் அதாவது 80 களின் ஆரம்பங்களிலிருந்தே இலக்கியம் அரசியல் என பணியாற்றத் தொடங்கியவர்களில் அவனும் ஒருவன். ஒரு கவிஞனாக நடிகனாக விமர்சகனாக செயற்பாட்டாளனாக அவன் பல முகங்களைக் காட்டியவன். எக்சில் சஞ்சிகையின் ஆரம்பகாலத் தோற்றத்துக்குக் காரணமானவர்களில் ஒருவனாக இருந்து பின் உயிர்நிழல் சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவனாக தனது உழைப்பைத் தொடர்ந்துகொண்டேயிருந்தான். பரீசில்

www.tamilarangam.net

வெளிவந்த முழுநீளத் திரைப்படமான 'முகம்' படத்தில் முக்கிய பாத்திரத்தில் வந்து தன்னில் நடிப்பாற்றல் புதைந்திருப்பதை வெளிப்படுத்திக் காட்டினான். புகலிடத்தின் இலக்கியச் சந்திப்புகளில் ஆர்வமுடன் காணப்பட்ட அவன் பரிசில் சந்திப்புகளை நடத்துவதிலும் முன்னின்றான்.

தமது வலுவுக்கு எட்டியளவு தமது உழைப்பையெல்லாம் கரைத்து அவனும் அவன் துணைவி லக்சுமியும் உயிர்நிழல் சஞ்சிகையையும், சில வெளியீடுகளையும் வெளிக்கொணர்ந்தார்கள். புலம்பெயர் இலக்கியத்தின் தோற்றத்தில் பன்முகக் கருத்துகளுடன் எழுத்தின் வலிமையை நிலைநாட்டிவந்த சஞ்சிகைகளில் எக்சில் உயிர்நிழல் என்பவற்றுக்கும் முக்கிய பங்குண்டு. விடாமுயற்சியோடு சொந்த உழைப்பில் அண்மைக்காலம்வரை உயிர்நிழல் சஞ்சிகையைக் கொண்டுவந்து தனது பாதையைத் தொடர்ந்துவிட்டு இன்று எம்மைவிட்டு நிரந்தரமாய் விடைபெற்றுவிட்டான்.
நம்பமுடியவில்லை. எம் நினைவில் அவன் மரணத்தை இருத்தமுடியவில்லைத்தான். ஆனாலும் நம்பித்தான் ஆகவேண்டும் என்றானபோது எழுகிறதே வலி, இங்கு அவன் எம்முடனே வாழ்ந்துகொள்கிறான். திரட்சியான அனுபவங்களுடனும் பின்னணிபடா அரசியலுடனும் அவன் எம்மில் இணைந்துகொண்டதால் மெல்ல நெளிகிறதே ஒரு கணம், இங்கு அவன் எம்முடனே வாழ்ந்துகொள்கிறான். அவன் வாழ்ந்துகொள்வான் எம்முடன். துணைவியாக ஒரு நண்பியாக தோழியாக அவனுடன் வாழ்ந்த லக்சுமிக்கும் மகன் கபிலனுக்கும், அவனது சகோதரன் திருமாவளவனுக்கும் எமது கரங்களின் மெல்லப் பற்றுதலாய்... அவர்தம் துயருள் எம் இணைவாய்...

எமது கண்ணீர் அஞ்சலி!

**- சுவிஸ் நண்பர்கள்.**

www.tamilarangam.net

# இலக்கியச்சந்திப்புக்குழுவின் கண்ணீர் அஞ்சலிகள்



## உயிர்நிழல் கலைச்செல்வன்

கடந்த வருடம் பாரிஸில் உமாகாந்தனின் மறைவோடு ஏற்பட்ட துக்கம் ஆறுவதற்கு முன்பு மற்றுமொரு இலக்கியவாதியின் மறைவு புகலிட தமிழ் இலக்கிய நெஞ்சங்களிடையே கண்ணீர் துளிகளை விதைத்துச் சென்றிருக்கின்றது. இலக்கிய நண்பரும் புலம்பெயர் இலக்கிய வரலாற்றில் கணிசமான பங்கை ஆற்றியவருமான கனகசிங்கம் கலைச்செல்வனின் மறைவு இலக்கிய வட்டத்தில் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது. 1983முதல் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வந்த கலைச்செல்வன் 1989முதல் இலக்கியச்சந்திப்புக்களில் தனது பங்களிப்பைச் செய்து வந்ததுடன் பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்புக்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு பெருமளவு உதவிகளைச் செய்து வந்தவராவார். பாரிஸில் வெளியான பள்ளம் சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கிய இவர் உயிர்நிழல், எக்ஸில் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார். சிறுகதைகள், கவிதைகள், இலக்கியவிமர்சனங்கள் என இலக்கியத்தடத்தில் கால் பதித்திருந்த கலைச்செல்வன் புலம்பெயர் தமிழ்சமூகத்தில் உருவாக்கம் பெற்ற முகம் என்கிற திரைப்படத்தில் நடிகனாக தன்னை பரிணமித்துக்கொண்டார். எக்ஸில் அமைப்பின் மூலம் பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கிய வெளியீடுகளை வெளியிட்டதுடன் புகலிடத்தின் முதலாவது பெண்கள் கவிதைத் தொகுப்பான *மறையாதமறுபாதி* வெளியீட்டைக் கொண்டுவருவதில் பெரும்பங்காற்றியிருந்தார். கலைச்செல்வனுடன் அவரது இலக்கிய முயற்சிகளுக்கு பெரிதும் பங்காற்றியவர் அவரது துணைவியார் லக்சுமி அவர்கள். இருவரது பங்களிப்பில் பல இலக்கிய வெளியீடுகள் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தில் வெளியாகியிருக்கின்றன. யுத்தம், மரணம் வன்முறைகள் இவைகளுக்குள் சிறைப்பட்டுப்போன தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் சுதந்திரமான இலக்கிய முயற்சிகள் வெளிவருவது கூட ஒரு அச்சுறுத்தல் நிறைந்த சூழலாகவே விளங்கியது. இந்தச்சூழல்களுக்குள் தப்பிப்பிழைத்து தொடர்ந்தும் சுதந்திரமாக இலக்கிய முயற்சிகளைக் கொண்டுவருவதில் கலைச்செல்வன் பங்காற்றியுள்ளார்.
இலங்கை, இந்தியா உட்பட புலம்பெயர்நாடுகளில் வாழும் இலக்கிய நண்பர்களுடன் ஆரோக்கியமான நட்பு உறவுகளை பேணிக்கொண்டிருந்த கலைச்செல்வன் இலக்கிய விமர்சனங்களில் ஆரோக்கியமான கருத்துக்களை முன்வைத்தவர்களில் ஒருவர். பெண்ணியம், தலித்தியம், தமிழ்மக்களின் போராட்டம் போன்ற விடயங்களில் பல விவாதங்களையும் கருத்துப்பரிமாற்றங்களையும் இலக்கிய நண்பர்கள், சந்திப்புக்களிடையே மேற்கொண்டு வந்தார்.
புலம்பெயர் தமிழிலக்கிய பரப்பில் தனக்கென ஒரு இடத்தை பதித்துவிட்டுச் சென்றிருக்கும் கலைச்செல்வனுக்கு இலக்கியச்சந்திப்புக்குழு தனது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துவதுடன் அவரது மறைவால் துயரத்தில் ஆழந்திருக்கும் அவரது குடும்பத்தினர், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரது துயரங்களிலும் பங்கு கொள்கின்றது.

**- இலக்கியச்சந்திப்புக்குழு** (ஸ்ருட்காா்ட்)
060.03.05

www.tamilarangam.net



கலைச்செல்வனின் மறைவு குறித்த செய்தி நம்மெல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது. முதலில் வெளிவந்த செய்தி உண்மையாக இருந்துவிடக்கூடாது என்பதற்காக ஐரோப்பாவிலுள்ள ஏனைய இலக்கிய நண்பர்களுடன் தொடர்புகொண்டு உறுதிசெய்துகொண்ட போது உடைந்து போனோம். இன்னமும் அந்தச் செய்தியை விழுங்கமுடியவில்லை.

கலைச்செல்வனுடன் சேர்ந்த செய்த இலக்கியப் பணிகளும், ஜனநாயக மறுப்புக்கு எதிரான செயற்பாடுகளுக்கு அவரின் கைகோர்ப்பு,அர்ப்பணிப்பு மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக அவரது சகிப்புத்தன்மையும், இரக்க குணமும், மனிதமும் எம்மால் மறந்து விடமுடியாது.எங்களோடு அரசியல் பணிகளில் ஈடுபட்ட காலம் தொடங்கி, அவரது இலக்கிய மற்றும் சமூகப் பணிகள் வரை எமக்கு இருந்த நம்பிக்கைகளில் கலைச்செல்வன் முக்கியமானவர். எமக்கிருந்த உளப்பலத்தில் கலைச்செல்வன் முக்கியமானவர். இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடமுடியாதபடி, தலையில் அதிக கனத்துடன் இந்த செய்தியை எழுத வேண்டியிருக்கிறது. சமீப காலமாக எம்மைச் சுற்றியிருந்த பல இலக்கிய நண்பர்களின் பிரிவுகள் தொடர்ச்சியாக நம்மை உள ரீதியில் தனிமையுணர்வை ஏற்படுத்தி வந்த வேளை இந்த செய்தி மேலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போல வந்து சேர்ந்து விட்டது. அவரது வாழ்க்கை துணைவியாக மட்டுமன்றி அவரது ஆத்ம பலமாக இருந்து வந்த லக்ஸ்மி மற்றும் கபிலன் மற்றும் ஏனைய நண்பர்கள் உறவினர்களுடன் இந்த துயர் பகிர்வில் நாங்களும் இணைந்துகொள்கிறோம்.

**நோர்வே நண்பர்கள்**

www.tamilarangam.net



சமகால அரசியல், இலக்கியம், சமூகம் குறித்த தீவிர விசாரணைகள் கொண்டிருந்த கலைச்செல்வனின் மறைவு நெஞ்சை உறையவைக்கும் துயர நிகழ்வாகும்.

குருட்டுத்தனமான அரசியல் வழிபாடுகள் குறித்தும், விமர்சன சுதந்திரம் குறித்தும் கலைச்செல்வன் கொண்டிருந்த கருத்துகள் நவீனயுகத்திற்குரியன. பாரிஸில் கொடூரமான அரசியல் வன்முறைக்கு இலக்கான கலைச்செல்வனின் அனுபவம் விமர்சன சுதந்திரத்தின் வலிமையை அவர் நெஞ்சில் விதைத்திருந்தது.

கலைச்செல்வன் வெளியிட்ட பள்ளம், எக்ஸில், உயிர்நிழல் ஆகிய பாரிஸின் இலக்கியச் சஞ்சிகைகள் தீவிர அரசியல், இலக்கியக் கருத்தாடல்களுக்கு சிறந்த களம் அமைத்தன. ஒரு இலட்சிய வேகத்துடன் இந்த சஞ்சிகைகளை வெளியிடுவதில் அவர் காட்டிய அக்கறை அபூர்வமானது.

நேர்மைமிக்க ஒரு இலக்கியவாதியை, அரசியல் செயற்பாட்டாளனை இழந்த வெறுமையில் நாம் நிற்கிறோம்.

கலைச்செல்வனின் நிமிர்ந்த நடையும், கம்பீரமான தோற்றமும், கனிவு பொங்கும் விழிகளும் என்மனசில் இப்போதும் நிழலாடுகிறது. கலைச்செல்வன்

www.tamilarangam.net

வாழ்க்கையின் சௌந்தர்யங்களை ரசித்து அனுபவிக்கும் தேர்ந்த கலைஞன். மென்னுணர்வுகளின் வார்ப்பு. கலைச்செல்வனின் குழந்தைத்தனமான சிரிப்பு எவரையும் வசீகரிக்கவல்லது. கலைச்செல்வன் கூடும் இடங்களில் கலகலப்பிற்கு குறைவிருக்காது. இசை ரசனைமிக்க கலைச்செல்வன் எவரது மனத்தையும் புண்படுத்தத் தெரியாதவர். உணர்ச்சி வேகத்தில் செயற்படும் தருணங்களிலும் மறுவிநாடியே அதை மறந்து போகும் சித்தன் அவன்.

மரணம் திருடனைப்போல இந்த உயர்ந்த ஆத்மாவை எம்மிடம் இருந்து பறித்துச் சென்றிருக்கிறது. திருப்பி யோசித்துப் பார்க்கையில் மரணம் குறித்து கலைச்செல்வன் ஒருபோதும் அஞ்சியதில்லை என்றுதான் கூறத்தோன்றுகிறது. மரணத்தைப் புன்னகையோடு எதிர்கொண்ட தனது தந்தையை அவர் சிலாகித்துப் பேசுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

கலைச்செல்வனை நினைக்கும்போது என் நெஞ்சின் அடிஆழத்தில் துயர நரம்புகள் வெடித்துச் சிதறுவதாய் உணர்கிறேன். அவரது களங்கமற்ற சிரிப்பை நினைவு கூர்கையில் கண்கள் கலங்குகின்றன. தென்றலின் அசைவில், ஒரு புஷ்பத்தின் மலர்வில், அருவியின் சலசலப்பில் கலைச்செல்வன் என்ற காந்தர்வ புருஷன் எப்போதும் அவனுக்கேயுரிய மந்தகாசப் புன்னகையுடன் தோற்றம் தருவான்.

-மு. நித்தியானந்தன்
லண்டன்
7.3.05

www.tamilarangam.net



# தனித்துவம் மிக்க ஒரு நல்ல நண்பனை மரணம் ஆடையாக போர்த்திக்கொண்டது

இன்னமும் நம்பமுடியவில்லை.
மரணம் என்னை ஆடையாக உடுத்தி அழகுபார்க்க விரும்புகிறது. நான் போய்வருகிறேன் என சில மணித்தியாலத்திற்கு முதல் வந்துபோனது எனக்குத் தெரியவில்லை. 6 மாதங்களின் பின்பு கடைக்கு வந்து வழமைபோலவே ஏச்சு, பேச்சு, புத்திமதி, தர்க்கம் செய்துவிட்டு போகிறாய். ஆறுமணித்தியாலங்களுக்குப்பின் உன் அழகுச்சிரிப்பு அடங்கிவிடுகிறது. புகழ்மிக்க அத்தனை கவிதைகளையும் தகர்த்துவிடும் உன் அழகுச்சிரிப்பை எம்மால் மறக்கமுடியவில்லை.

எந்தவித சமூகசிந்தனையும் இல்லாமல் சொந்தவாழ்க்கையில் நிலைத்துநிற்கும் புகலிடவாழ்வில் சமூகஅக்கறையுடன் வாழ்ந்த நல்ல நண்பனை நாம் இழந்துநிற்கின்றோம். உயிர்நிழல் என்ற சஞ்சிகைமூலம் மாற்றுக்கருத்துக்களை மக்கள்முன் வைப்பதில் முழுமூச்சுடன் செயற்பட்ட நண்பன் கலைச்செல்வனின் இடத்தை நிரப்பமுடியாது. புலம்பெயர் வாழ்வில் இன்றுவரை நீ பதித்துச்சென்ற கலை, இலக்கிய பங்களிப்புகள் எழுதப்படவேண்டிய புகலிடச்சான்றுகளாகவே இருக்கும். கலையும், இலக்கியமுமாக கரைந்த உன் வாழ்க்கைகாலத்தில் நாமும் வாழ்ந்தது மகிழ்ச்சியே.
என்றுமே சிரித்தமுகம், கவர்ச்சியான தோற்றம், சோர்ந்துபோகாத வாழ்க்கை, இதுதான் எனது நோக்கம் என்பதில் உறுதி, எதிரிகளே இல்லாத வாழ்க்கை இவைகள் நண்பன் கலைச்செல்வன் எமக்கு விட்டுச்சென்ற பாடங்கள் சில.
மரணத்தினை வரவேற்க காத்திருப்பது போன்ற எமது புலம்பெயர் வாழ்க்கையிலிருந்து நீ விடைபெற்றாலும் எம் நெஞ்சமெல்லாம் நீ நீண்டகாலம் வாழ்வாய். உன்பிரிவு எமது ஆறாத்துயர்.
உனை இழந்து தவிக்கும் உன் குடும்பம் அனைவருக்கும் எமது அனுதாபங்கள்.

**- அறிவாலயம் புத்தகசாலை**
**பாரிஸ்**

www.tamilarangam.net



சிந்திச் சிதறுமே
சிந்தனை முத்துக்கள்
உனது சிரிப்பில்
எண்ணக் கருக்களை
உயிர்பெற வைத்த
உனது எழுதுகோல்
பள்ளம் எக்சில் உயிர்நிழலாய்
பதியம் செய்த
உனது இலட்சியத் தடங்கள்
அடையாளமற்ற கலைஞனாய்
அரங்குகளை அதிர்த்திய
உனது கலை முகம்
தோழனே! நாளும்
மனிதத்தின் விடியலே
உனது தேடல்
எல்லாமே ஒரு பொழுதில்
எங்கேயோ தூரமாய்
உனது ஊர்வலம்
செல்வனே
நீ நடந்த பாதைகளில்
நேசச் செடிகள் நாட்டி
நீரூற்றுவோம் அதுதானே
உனது தாகம்

*- எம். அரியநாயகம்*

Groupement Inter Cultural Franco - Tamoul, FRANCE.

பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியம்

www.tamilarangam.net

# நினைக்கிறேன்



செல்வங்களில், பெரும் செல்வங்களாம்
கலைச்செல்வங்கள்
அக்கலை செல்வங்களை காண
தேடி, ஓடி, ரசித்த நாட்களில்
கலைகளின் செல்வன்
உன்னை கண்டேன்.
உன்னில் உன் உள்ளத்தில்
உருசி கொண்ட
ஒரு அன்பை கண்டேன்
என்னை கண்ட போதெல்லாம்
முகமலர்ந்து கைகுலுக்கி
கவியே, கவிக்குயிலேயென
செல்லமாக சொல்லிச் செல்வாய்
நானும் செல்லமாக சிரித்து
செல்வேன்
பல இலக்கிய விமர்சனங்களுடும்
உன்னை சந்தித்தேன்
சிலவேளை தட்டிக்கொடுப்பாய்
சிலவேளை முட்டியும் கொள்வாய்
உன் வீம்பு வாதங்களால் நான்
நொந்து கொண்டு வந்துகொண்ட
கவிதைகள் பலகண்டு கழிப்படைந்தேன்
இவையே எனக்கு உன்னில்
பிடித்தவை
என்றும் சிரிக்கத்தெரிந்தவனே!
சிரித்துக்கொண்டேயிருப்பாய்
உயிர்களில் சிரிக்கத்தெரிந்த
உயிர் மனிதஉயிர் என்பதை
உன்னில் உறுதிப்படுத்தியவனே!

மனித மனங்களை நேசித்தவனே!
மனிதர்களும் மனிதமும் மண்ணில்வாழ
எழுத்துக்களிலும், பேச்சிலும், நடிப்பிலும்
உன்னை காட்டியவனே!
இன்று உன் மரணச்செய்திகேட்டு
மனம் உடைந்து மனம்நொந்தேன்
எதற்கு? மரணம் உன்னைதேடியது
இதற்கு? பெயரா?
அந்த இழிந்த வாழ்வு
அழிந்த வாழ்வு விழிந்தேன்;

உன்னை உன் எண்ணத்தை
தெரிந்தவர், புரிந்தவர் யாருமில்லையோ
அறியேன், தெரியேன்
எதை தெரிந்தார்களோ, எதை புரிந்தார்களோ,
உன் நண்பர்கள், அன்பர்கள்
அதையும் அறியேன்? யான்
ஒன்றுமட்டும் அறிந்தேன்
உன் சிரிப்பை மட்டும் புரிந்தேன்
ஏனெனில் சிரிக்கமட்டுமே
பிறந்தவர்கள் யாம்
சிரித்துவிட்டு போகின்றாய்
சிந்திக்கின்றேன்
சிந்துகின்றேன் இன்று
ஒரு துளி கண்ணீர்? உனக்காக
இதுவே எமது நிரந்தரப்பயணம்
நினைக்கிறேன்.

**- ஜெயா பத்மநாதன்**

www.tamilarangam.net



கோத்தகிரி
07-03-2005

நமது அன்பு நண்பர் கலைச்செல்வன் அவர்கள் மாரடைப்பின் காரணமாக நேற்றுத் திடீரென மரணமடைந்துவிட்ட செய்தியைத் தங்கள் வழியாக அறிந்து பெரும் அதிர்ச்சியடைந்தேன்

1996 இல் எனது ஐரோப்பியப் பயணத்தின்போது பிரான்ஸிலும் ஸ்விட்ஸர்லாந்திலும் அவரை மும்முறை சந்தித்து நீண்டநேரம் உரையாடியிருக்கின்றேன். அவரும் அவரின் வாழ்க்கைத் தோழருமான லக்ஷ்மியும் ஈழத் தமிழ் சமுதாயத்தின் பழமைபேண் மரபுகளை முற்றாகத் தூக்கியெறிந்து விட்டுத் தங்கள் சொந்த வாழ்க்கையைப் புரட்சிகரமானதாக்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன். பாரிஸ் நகரத்தின் கடும் சவால்களையும் சோதனைகளையும் மீறித் தங்கள் வாழ்வைக் கலை, இலக்கியம், புலம்பெயர்ந்தோர் நலம் என்னும் பல்வேறு துறைகளில் அர்ப்பணித்துக் கொண்டவர்கள் அவர்கள். தனது ஆக்கங்களைப்பற்றிய விமர்சனங்களை புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ளும்பரந்த மனப்பான்மை அவரிடம் இருக்கக் கண்டேன். குறிப்பாக அவரது முகம் என்னும் திரைப்படம் குறித்து நான் முன்வைத்த அத்தனை விமர்சனக் கருத்துக்களையும் மனதார ஏற்றுக்கொண்டவர். உயிர் நிழலில் எழுதுவதற்கான வாய்ப்பை நான் ஒரே ஒரு முறை பயன்படுத்திக்கொண்டேன் என்றாலும், அந்த ஏட்டின் பக்கங்கள் எப்போதும் எனக்காகத் திறந்திருக்கும் எனப் பலமுறை கூறியவர் அவர்.

கருத்து வேறுபாடுகளையும் தனிப்பட்ட நட்புகளையும் பிரித்துப்பார்க்கத் தெரிந்தவர்களில் அவரும் ஒருவர்.

அவரது அகால மரணம் நம் அணைவருக்கும் பெரும் இழப்பு

லக்ஷ்மி அவர்களுக்கும் கலைச்செல்வனின் உற்றார் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவக்குமாறு வேண்டுகிறேன்.

எஸ். வி. ராஜதுரை

www.tamilarangam.net



எதை எழுதுவது - வார்த்தைகள் அற்ற நீள்
துயர்கொண்ட மௌனம் ஒன்றையே என்னால் உன்
அஞ்சலியாய் தரமுடியும்.

என் வாழ்வு மூன்று மரணங்களினால்
நிலைகுலைந்ததுண்டு. ஒன்று என் நண்பனும்
தோழனுமான கேதீஸின் மரணம். மற்றையது என்
அம்மாவின் இறப்பு. அடுத்தது என் செல்வியின் மரணம்.
இந்த மூன்று அதிர்வுகளின் அனைத்துமாய் உன்
மறைவு.

என் வாழ்வில் நீ காட்டிய அக்கறைகள், துயர்கொண்டு
சோர்வுற்ற காலங்களில் நீயும், லக்சுமியும் தந்த
பரிவுகள் - ஆதரவுகள்.
'புகலிட வஞ்சகங்கள்' என்னை குதறியபோதெல்லாம்
நியாயத்தின் துணையாய் நீ தந்த நம்பிக்கைகள்.
நினைவுகள் என்றும் அழியா.
ஜெயந்தியினதும் என்னினதும் உன்மீதான நேசிப்பும் -
உன்நினைவும் என்றும் இருக்கும். எங்கள் இருவரினதும்
இணைவை சாத்தியமாக்கியவன் நீதானே!
உன் நட்பின் காலம் எங்கள் வாழ்வின் மகத்துவம்.

- அசோக்.
07. 03. 2005
காலை 10:27
உன் வீட்டிலிருந்து

www.tamilarangam.net

# தூங்கும் கவிதைகளைத் துயிலெழுப்பாதவன்



கலைச்செல்வனை நான் முதலில் கண்டது 1989ம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதி நாட்களில். அன்றிலிருந்து சமீப காலம் வரை ஒரு பெரிய உறவினைக் கட்டியமைக்க முடிந்திருக்கிறது எங்களுக்கு. என்னை அறிந்த பின் என் உறவு சார்ந்த பலரையும் ஈர்த்து நேசித்து அந்த வட்டத்தை அகலித்துக் கொண்டிருப்பது அவனது இயல்பாயிருந்தது ஒரு காலம். '... உடன் படாக் கருத்தையும் உரைக்கின்ற உரிமையை எம்முயிர் ஈந்தினி நாம் காப்போம்...' என்ற வொல்ரைரின் கருத்தில் கலைச் செல்வனுக்கு எப்போதும் ஈற்பு இருந்திருக்கிறது. நல்லவை என்று தான் நம்பியவறைத் தன்னுயிர் ஈந்து பணி உவக்கும் பண்பினைப் பெற்றிருந்தவன் அவன். இலக்கியச் சந்திப்புக்களின் போதும், அது முடிந்த இரவுகளிலும் எங்களுக்கு தெரிந்ததும் தெரியாததுமான எல்லா விடயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டும் பின்னர் உடன்பாடுகளையும் முரண்பாடுகளையும் மூட்டை கட்டி வைத்துவிட்டுப் பாடியும் ஆடியும் கழித்திருக்கிறோம் எங்களுக்கான காலங்களைச் சுவைத்தபடி. இன்று போல் இருக்கிறது அந்த நாட்கள்.

ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கொருமுறை வெவ்வேறு இடங்களில் நடந்த இலக்கியச் சந்திப்பில் கலந்து கொள்வது...நிகழ் அரசியல், இலக்கிய விடயங்களை

www.tamilarangam.net

விடிய விடியத் தூக்கமின்றி விவாதிப்பது, கோரமாகிக் கொண்டிருக்கும் உலகச் சூழலில் ஒவ்வொருவரும் சோம்பிப் போகும் போது ஒருவருக்கொருவர் எங்கள் மனக்கோல் ஊன்றி நெம்புவது என்பதுவே தொழிலாகிப்போன காலமொன்றிருந்தது எங்களுக்கு. புகலிடத்தில் வெளியாகிய சிறு சஞ்சிகைகள் தொடக்கம் தமிழில் வெளியாகின்ற நூல்கள் வரை விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்கிற போது, கலைச் செல்வன் எப்போதுமே தன் அபிப்பிராயத்தைச் சொல்லாமல் விட்டதில்லை. எதிர்ப்பிலக்கியப் பண்பின் முகிழ்ப்பாக புகலிட இலக்கியத்தின் அடிப்படைகளை 1989 களில் இருந்தே வரையறை செய்ய கலைச் செல்வன் முயன்றவர். தொடர்ந்த தேடலிலும் தெரிதலிலும் ஈடுபட்டு அவன் எழுதிய *தமிழில் புகலிட இலக்கியம* பற்றிய கட்டுரைகள் முக்கியமானவை.
இளம்பராயத்திலிருந்தே சவால்களை எதிர்கொண்ட அனுபவத்தில், ஆர்வ மேலீட்டில் எல்லாவற்றையும் தன் தலை மேற்போட்டுக்கொண்டு யாருக்கும் தெரியாதபடி திணறுவான் கலைச்செல்வன். அவனது தனித்த நலன்களில் நான் அறையோடு விடுக்கும் வசவுகளைக் கேட்டு சொல்வதை ஏற்பது போல் தோற்றந்தருவான். நான் தனக்கொரு அண்ணன் என்று பிரகடனப்படுத்துவான்.
அலறுகின்ற ஆலயமணி ஆர் இறப்பை சொல்கிறது...ஒப்பாரி வருகின்ற திசை காவும் பெயரென்ன...என்னில் எங்களில் உயிரின் துண்டமொன்று உதிர்கிறதாய்....மணியின் ஓசையும் ஒப்பாரித்திசையும் என் பெயர் சொல்வதாய்...
கண்படுகின்ற இடத்திலெல்லாம் கவிதை தூங்கிக் கொண்டிருக்கிறதாம். கலைச்செல்வனுக்குள் உறங்கிக் கொண்டிருந்த கவிதைகள் ஆயிரம். ஆர்வங்களும் திறமைகளும் ஆசைகளும் கூட ஒரு அரைவிழிப்பில் அவனோடு போயின.
புகலிட வாழ்வில் காலூன்ற அவன் எடுத்த பிரயத்தனங்களில் ஒரு கால் நூற்றாண்டு அழிந்தது. விளிம்புநிலை ஆளுமைகளை ஆற்றுப்படுத்த இந்தப் புகல்கால வாழ்வுக்கு அடிக்கடி முடிவதில்லை.
07.03.2005

ந. சுசீந்திரன்

www.tamilarangam.net

# கலை! செல்! வா . . . .

முகமூடி மனிதர் முன் - நிஜ
முகம் காட்டி
வாழ்ந்தவன் நீ!

புகலிட இலக்கியத்தின்
புகலிடமாய்
நின்றவன் நீ!

முரண்பாடுகளுடன் கூட
முரண்படாமல்
வந்தவன் நீ!

மாற்றுக் கருத்துக்களின்
சாற்றோனாய்
இருந்தவன் நீ!

எம் உயிர் வாழும் வரை
உந்தன்
உயிர் நிழல் வாழும்!



சென்று! வா . . . கலைச் செல்வா!

ஞானி வதனி
**வதனி மஹால் நண்பர்கள் பாரிஸ்**

# கலைச் செல்வன்...



**நிழலுக்கு உயிர் கொடுத்த நண்பா
நீ இல்லாத போதும் - உன்
'உயிர்நிழல்' எம்மோடு வாழும்...**

- DAN (DISH ASIA NETWORK) குடும்பத்தினர்

11 - 17 மார்ச் 2005 ஈழநாடு **13**

முகம் திரைப்படத்தின் முதல் முகமே அவன்தான்
இயல்பான நடிப்பு
இதயத்தில் மதித்த இனிப்பு
இன்னும் மாறவில்லை
இறப்புச் செய்தி
வந்து விட்டது
ஏன்
எதற்கிந்த அவசரம்
கலைச் செல்வா
உன் கலைச்செல்வங்களை
மனதில் பட்டதை நேரில் சொல்லும்
உன் மனதை
நல்லதை மனந்திறந்து பாராட்டும் அதே வேளை
கூடாதவற்றை அது சம்பந்தப் பட்டவரிடமே
கூறிடும் நேர்மையான மனதை
கலை ஆர்வமும்
இலக்கிய ஆர்வமும்
வாழ்வியலாக்கிக் கொண்டுவிட்ட லட்சியத்தை
அதில் லயித்து
அதற்காக உழைத்து
அதையே வாழ்க்கையாக்கி
அவற்றுள் உன்னை மறந்து
தொண்டனாக
தோழனாக
வண்டாக
உயிர்த் துடிப்புடன் வாழ்ந்த
உன் வாழ்க்கையை
இத்தனை அவசரமாக
யாரும் கற்பனையில் கூட எண்ணமுடியாத
கலைச் செல்வா!
உன் கலையும்
உன் கதைகளும் வாழும்
அது நிரந்தரம்



என்றும் உன் அன்பான R. ரகுநாதன்

www.tamilarangam.net



ஈழத்தில் இருந்து அரசியல் பொருளாதார அகதியாக புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் நாங்கள்
எங்களில் கனவுகளைத் தொலைத்து விட்டவர் பலர்.
வக்கிரமான கனவுகளுடன் வாழத் துடிப்பவர் பலர்.
சாத்தியமற்றவைகளான கனவுகளை சாதிக்கப்படத் துடிப்பவர்கள் பலர். பலவித கனவுகளோடு வாழ்க்கையை இழுத்துச் செல்லும் இத் தமிழ்ச் சமூகச் சூழலில் தோழர் கலைச்செல்வன் இதில் தன்னை முற்றிலுமாக மாற்றிக்கொண்டு உலகின் புதிய பிரசவத்தின் வாழ்வு முறையை ஒரு போராட்டமாக முதல் போராளியாக வாழ்ந்து காட்டிவன்

அடிப்படையில் இடதுசாரிப் பாரம்பரியத்துடன் தன்னை இறுக்கமாக இணைத்துக் கொண்டு இலக்கியத்தின் இன்னுமொரு பக்கத்தை தொட முயன்றவன். தோழர் கலைச்செல்வனுடனான கருத்தியலோடு மிகமிக நெருக்கமில்லையெனினும் அவனது வாழ்வியலின் போராட்டத்தில் அவன் கொண்ட உறுதி ஒரு முழு மானிடனாகவே உணர்த்தியது. சாதகமும், தாலியும், சீதனமுமாக சதைகளைப் பொருத்திவைக்கும் எமது சமூகச் சாக்கடையின் ஆணிவேரை அசைத்துப் பார்த்தவன். ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவை மனதை வைத்துப் பொருத்திப் பார்த்தவன்.

கலை என்பது அவர் பெயரோடு மட்டும் ஒட்டியதல்ல உடலோடும் உணர்வோடும் கலந்தே இருக்கிறது. எந்த கனதியான வேடமாகினும் கச்சிதமாக நடிக்கும் ஆற்றல் உண்டென்பதை முகம் திரைப்படத்தில் முத்திரை பதித்தான்.

ஐரோப்பா எங்கும் இலக்கியக் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து கருத்துக் கலகங்களை உவாக்குவதில் முன்னணி நடத்துனராய் விளங்கினான். தேடல் சஞ்சிகையும் முகம் திரைப்படமும், இலக்கியச் சர்ச்சைகளும் அதைவிட சேர்ந்து தண்ணி அடித்துவிட்டு ஆடிப்பாடிய நினைவுகளும் என்றென்றும் என் மனதில்.

போய் வா நண்பனே
வாழ்த்தி வழி அனுப்புகிறேன்.

- தேவதாஸ்

www.tamilarangam.net

# இலக்கிய நண்பனே!



இந்த இறப்பிலிருந்து
இன்னொரு கலைச்செல்வன்
தோன்ற வாய்ப்பிருந்தால்
இழப்பினைத் தாங்கலாம்?

பாடையில் அல்லவா
படுத்திருக்கிறார் பின்பு
சூளையில் ஒருபிடி
சாம்பலாகி மனிதம்
ஓடையில் கரைத்துவிடும்!
அடுத்தகணம் நீரினில்
மூழ்கிவிட்டு நினைப்பும்
ஒழிந்துவிடுவார் இன்றே

நானோ இன்றளவே
கண்ணீரை ஊற்றாக்கி
ஆறாக ஓடவிட்டேன்!
கவிதையிலே பாடிவிட்டேன்
ஆன்மா சாந்தியடைய
நானாகி உருகிநின்றேன்!

இலக்கியத்தின் ஈடுபாட்டில்
தலைக்கனத்தை விட்டுவிட்டு
இலக்கணமாய் இருந்தாய்
தப்பெனக் கண்டதைப்
பொட்டெனப் போட்டுடைப்பாய்
நண்பா கலைச்செல்வனே!
இத்தனிப் பண்புதான் எனக்குப்
பிடித்தநற் பண்பாகும்.

அத்திறமை நீண்டதுயில்
கொண்டதென்ன கொடுமை
கடிமையாய்க் காலனை
உதைக்கிறேன் இக்கணமே

சாவுனக்கு சாவுவந்து
சாவின் துயரநிகழ்வின்
மரணத்தில் மாண்டுபாரென
காலனே உனை உதைப்பேன்!

பொய்ப்பிடித்த போதனைகள்
பேய்ப்பிடித்ததெனச் சொல்வாய்
வேடங்கள் போடாத
பாடங்களை வரவேற்றாய்
சொன்ன பதில்களெல்லாம்
என் நெஞ்சில் இருக்கின்றது!
கலைஇலக்கிய நண்பனே
நெஞ்சம் கனத்திடும்
பிவுத்துயரில் எந்தனது
பிள்ளைத்தமிழில் அழுகின்றேன்!

நெஞ்சில் சிலபல...
நினைவுகள் வாஞ்சையோடு
பிரிவினில் கொஞ்சுதடா
இலக்கிய ஆற்றலந்த
நீங்காத நினைவுகளாய்
ஊற்றினைப்போல் ஊறும்
நாற்றினைப்போல் எழும்
காற்றடித்தும் வளையாது
நெஞ்சம் மறக்காது!
கலைச்செல்வனே எந்தன்
நினைவுக்குள் கனவுக்குள்
சொந்தம் ஆகிவிட்டாய்!

என்கவியோடு நிறைந்தாய்
நண்பனே போய்வா......

மா.கி.கிறிஸ்ரியன் (பிரான்ஸ்)
10.03.2005

www.tamilarangam.net

## சிரித்த முகத்தின் சொந்தக்காரன்

புலம் பெயர் வாழ்வியலில்
வாழ்க்கையின் வட்டத்தைச்
சுருக்கிக் கொண்டு சமூகம்
பற்றிய அக்கறையின்றி வாழும்
சமூகத்தில் சமூகம் சார்ந்து
சிந்தித்தவர்களில்
முக்கியமானவனாக, சஞ்சிகை
ஆசிரியனாக, கவிஞனாக,
எருத்தாளனாக, இலக்கிய
விமர்சகனாக, நடிகனாக,
அரசியல் விமர்சகனாக,
புலம்பெயர் இலக்கியச்
சந்திப்பின் முன்னோடிகளில்
ஒருவனாக, தான்
எழுதியதற்கும் பேசியதற்கும்
ஏற்றவாறு வாழ்வை
அமைத்துக்கொண்ட சிலரில்
ஒருவனாய் புலம்பெயர்
இலக்கியத்தை தமிழ் இலக்கிய
உலகம் திரும்பிப் பார்க்க
வைத்தவர்களில்
முக்கியமானவனாய், பன்முகச்
செயற்பாட்டாளனாய், எந்தச்
சக்திக்கும் அடிபணியாது உன்
கருத்துக்களை துணிந்து
வெளியிடுபவனாய்,
நின்றுபோய்விட்ட உயிர்
நிழலுக்கு மீண்டும்
உயிர்கொடுக்கப்
புறப்பட்டபோது உன்னையே
இழந்துவிட்டு நம்பமுடியாமல்
நிற்கின்றோம். சிரித்த
முகத்தின் சொந்தக்காரனே!
உன் விம்பம் எம்
மனத்திரையில் என்றும் வாழும்

- உதயகுமார் -



## நீ மரணிக்கவில்லை

நீ ஒருவனே எனக்குப் பல
நண்பனாக இருந்ததால்
நான் பல நண்பர்களைத் தேடவில்லை
தொலைத்தொடர்புச் செய்திகேட்டு
நடைப்பிணமாகி விட்டேன்
எனக்குத் தெரிந்த நாளிலிருந்து
பிறருக்காய் உன்னை உருக்கியவன்
சொந்தத் தொழில் வேண்டுமென்று
உணவகம் திறக்கப் போகிறேன்
என்று என்னிடம் வந்தாய்
வியாபாரம் உனக்குச் சரிவராது
கதையை விடு வேறு கதை
கதைப்போம் என்றேன்
என் இறுதி ஆசையை நிறைவேற்ற
இது வேண்டுமென்றாய்
அதுவே உனக்கு யமனானதா
நீ மரணிக்கவில்லை
இலக்கியத்திற்குள் வாழ்கிறாய்
இசைக்குள் வாழ்கிறாய்
கலைக்குள் வாழ்கிறாய்

- செல்வநாயகம்

www.tamilarangam.net



ஒரு தேர்ந்த இரக்கமில்லாத தணிக்கையாளனைப்போல் உரையாடலை நிறுத்திக்கொள்ளச் சொன்னது சாவு!

கலைச்செல்வனுக்கும் எனக்குமான உரையாடல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. இலக்கியக் கூட்டங்களிலும், சிறு பத்திரிகைகளிலும், தேனீர்ச் சாலைகளிலும், தெருவோரங்களிலும், மதுக்கடைகளிலும் உரையாடல் நீண்டுசென்றது. அநேகமாக நாங்கள் சந்தித்த ஒவ்வொரு தருணங்களிலும் நான் அவருடன் மூர்க்கத்துடன் முரண்பட்டுக் கொண்டிருந்தேன். அந்த முரண்கள் தீராதவையாகவே இருந்தன. அதே போன்று அவர் மீதான தோழமையும் தீராத ஒன்றாகவே இருந்தது.

பாஸிஸத்தை எதிர்க்கொள்வதற்கான ஒரேவழி அதன் கண்களை விடாமல் உற்றுப் பார்ப்பதுதான்! கலைச்செல்வன் இறுதிவரை பாஸிஸத்தின் முகத்தை நேருக்குநேராக எதிர்க் கொண்டவர். ஒவ்வொரு தருணங்களிலும் அவர் பாஸிஸத்துக்கு அடிபணிய மறுத்தவர். பாஸிஸத்துக்கும் அதனால் நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு அராஜகத்துக்கும் எதிராகஅவர் பேசிக் கொண்டேயிருந்தார், எழுதிக்கொண்டேயிருந்தார், இயங்கிக்கொண்டேயிருந்தார். தனிப்பட்ட ஒரு நண்பனின் இழப்பு என்ற அளவில் கலைச்செல்வனின் இழப்பு எம்மால் எதிர்க்கொள்ளக் கூடியதாயிருக்கலாம். ஆனால் சமாதானத்துக்கும், சனநாயகத்துக்கும், யுத்தமறுப்புக்கும், கருத்துச் சுதந்திரத்துக்கும் ஏங்கிக் கிடக்கும் எம் சமூகத்திற்கு கலைச்செல்வன் என்ற மனித உரிமைப்போராளியின், கலைச்செல்வன் என்ற மாற்றுக் கருத்தாளனின், கலைச்செல்வன் என்ற மறுத்தோடியின் இழப்பு ஈடுசொல்ல முடியாத ஒரே இழப்பாகவே இருக்கும்.

தோழர் கலைச்செல்வனோடு நான் இதுவரை பேசாத சொற்களை தேடித் தேடி மனம் விழிகள் அற்ற ஒரு பூனையைப் போல அலைந்து கொண்டெயிருக்கிறது

- ஷோபாசக்தி

www.tamilarangam.net

கலைச்செல்வனின் மறைவுச்செய்தி ஒருகணம் நிலைகுலைய வைத்தது. மனசு நம்ப மறுத்தது.
ஆனாலும் நம்பித்தான் ஆகவேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

## புகலிட இலக்கியஉலகம் கலைச்செல்வன் என்றொரு ஆளுமையை இழந்து நிற்கிறது.

எண்பதுகளின் ஆரம்பத்தில் பாரிஸிற்கு அகதியாக்கப்பட்ட கலைச்செல்வன், தனது சமூகஉணர்திறனை தமிழீழ மக்கள்விடுதலைக்கழகத்தினூடாக வெளிப்படுத்தினார். அக்காலத்தில் வானொலி நிகழ்ச்சிகள், நாடகங்கள் என தமிழீழவிடுதலையினதும், கழகத்தினதும் தீவிர பிரச்சாரகராய் கலைச்செல்வன் விளங்கினார். சுறுசுறுப்பும், இயங்குதிறனும் அவரைவேகமாகவே வளர்த்தெடுத்தன.

பின்னர், போராட்டசூழலில் ஏற்பட்ட சோர்வும் விரக்தியும், எண்பதுகளின் கடைசிப்பகுதியில் அவரை இலக்கியத்தின்பால் நகர்த்தின.
பாரிஸில் வெளிவந்த, கண், தேடல், பள்ளம், எக்ஸில், உயிர்நிழல் என காத்திரமான இலக்கியசஞ்சிகைகளின் பின்னாலும், பாரிஸின் முக்கிய கலைஇலக்கிய செயற்பாடுகளின் பின்னாலும் கலைச்செல்வனின் ஆளுமை செறிந்திருந்தது.

உணர்ச்சிக்கொந்தளிப்பில் அடிக்கடி முட்டிமோதுவதும், பின் தவறுக்காக வருந்துவதும் கலைச்செல்வனின் இயல்பாயும், பெருந்தன்மையாயும் இருந்தன. கலைச்செல்வனின் ஆழ்மனச்சிலிர்ப்பும், நேசிப்பும் இரங்கவைப்பன. இந்தக்கணத்தில் கண்களை கசியச்செய்பவை.

புகலிடத்தில் இலக்கியத்திற்காக, பொதுவாழ்விற்காக அதிகம் இழந்த, தன்னை அளவுக்கதிமாக வருத்திக்கொண்ட மனிதனாக கலைச்செல்வனை இனங்காணமுடியும்.
கடைசிவரை தன்னை ஒரு ஜனநாயகவாதியாக, மறுத்தோடியாக அடையாளப்படுத்திவந்தவர் கலைச்செல்வன்.

புகலிடச்சூழலில், குறிப்பாக பாரிஸ்சூழலில் கலைச்செல்வன் என்ற ஆளுமையைத்தவிர்த்து இலக்கியம் பேசமுடியாது.
கலைச்செல்வனின் இழப்பு இழப்புத்தான் என்று ஒற்றைச்சொல்லில் சொல்லிவிட்டுப்போக முடியாதபேரிழப்பு அது.

இந்தநேரத்தில் கலைச்செல்வனின் நண்பியும், துணையுமான லக்சுமி, கபிலன் மற்றும் தோழர்களோடு ஆரத்தழுவி துயர்பகிர்ந்து கொள்கிறேன்.

- மனோ.

www.tamilarangam.net



புகலிட இலக்கியத்தின் மூலவேர்களில் ஒன்றும் பிரமாண்டமான ஆளுமைகளின் இருப்பிடமுமான தோழர் கலைச்செல்வனின் இழப்பில் தவிக்கிறோம்

எக்ஸில்
M.R. Stalin - R. Inpavalli



என் உடன்பிறவாச்சகோதரன்
கலைச்செல்வனின் மரணம் என்னுள்
ஆறாத காயத்தை ஏற்படுத்தியுள்ளது.
அவனது ஆத்மார்த்தமான
கலை ஈடுபாடும், நெத்திக்குநேரான
விமர்சனப் போக்கும் என்றுமே என்
மரியாதைக்குரியன.
இளவயதில் அவனது இந்த மரணம்
பேரிழப்பு.

பெஞ்சமின் இமானுவல்.
**தலைவர் திருமறைக்கலாமன்றம்**
**பிரான்ஸ்**

www.tamilarangam.net

# மலைகளைப் பொசுக்கும் வாலிபம்

இருள் அடர்ந்த என் உலகத்தில்
துயரத்தின் ஒளிக்கீற்றுக்குள் தான்
என் பாதங்களுக்கு வழி கொடுத்தன.
மலைகளும் அருவிகளும் நிறைந்த
இந்தப் பாலை வனத்தில்
பசி எனக்குச் சோறூட்ட
வறுமை ஆதரவோடு வளர்த்தெடுத்தது..
அவை பாலை வனங்களா?
இல்லை!
இன்னும் இன்னும் கொடியது.
ஈரலித்த மண்ணில்
ஆழப் பதிந்த சோகத்தின் சுவடுகள்
என் வரலாற்றை
மறுபதிப்புச் செய்து கொள்ளும்
இன்னும் இன்னும்
ஏன்?
காலம்
வட்டமான வரிக் கோடுகளாக
வலம் வந்து கொண்டிருக்க
இன்பம்
அவை எட்ட நின்று சிரித்து விட்டு
கிட்ட வந்து சோகச் சூட்டுக்குள்
எரிந்து போகின்றன.
அடிக்கடி துடிப்பிழந்து போகும்
என் இதயத்திற்கு அந்த இன்பங்கள் தான்
'வாழ்விருக்கு'
என வாழ்வை இழுத்து வருகின்றன.
இருக்கிறதா ?
இருக்கு என்ற ஏக்கம் தான் !
வாழ்வா?
அன்பு காதல் ஊடல் உறவு எல்லாமே
எனக்கும் இருக்கின்றதே -ஆயினும்
இவற்றைப் பாய்ச்சுவதற்கு
இதனை கடத்தற்கரிய சுவர்களா?
ஓடிவரும் குழந்தையின் உச்சி முகர்விற்காக
ஏங்கி ஏங்கி எத்தனை தரம் கைகளை
நீட்டி ஒடித்துக் கொண்டு விட்டேன்
இந்தப் பெரு மதில்களை எழுப்பியவர் யார்?
அதைத் தூசி தட்டி பழுது பார்க்கும் வாரிசுக்கள் யார்?
(25. தூண்டில், ஜன.1990)

**க. கலைச்செல்வன்**

www.tamilarangam.net

## வண்ண மலர்களின் உயிர்ப்பாய் கலைச்செல்வா!

இதயத்துக்குள் இணைந்து நிற்கும் நண்பனே!
கலைச்செல்வா!
என்ன இது! இப்படிச் செய்துவிட்டாய்?
நாற்பத்தைந்து வயதில் உன்னாயுள் முடிந்ததா?
நம்ப முடியவில்லை நண்பனே!
வாழ்வெல்லாம் பழகியும்
பலரால் நெஞ்சுக்குள் நிறையமுடிவதில்லை
நீயோ இரண்டுதினங்கள் மட்டுமே பழகினாய்
என் மனமெல்லாம் நிறைந்தாய்!
உனது கம்பீரம் கலைந்ததா?
உன் வண்ணப் புன்னகை சிதைந்ததா?
ஊடுருவும் உன் ஆராட்சிப்பார்வை அழிந்ததா?
உயிர் நிழலே பிரிந்ததா?
நம்பமுடியவில்லை நண்பனே!
மூவாயிரம் புத்தகங்கள் தேடிப்படித்தாய்
வாழ்வைப் புரிந்தாயா?
இல்லையேல்:
விடைகளின்றியா மரணம்???
நண்பனே!
அறியாத பிரபஞ்சத்தில் வண்ணமலர்களுள்
நீ உயிர்த்திருக்க எனது அஞ்சலிகள்.

*- சுவிஸிலிருந்து*
*கல்லாறு சதீஸ்*

www.tamilarangam.net



சிறகிலிருந்து
பிரிந்த இறகொன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச்செல்கிறது

- பிரேமிள்